1992 ஏப்ரல் 10]

4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.00

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா மீதான உரிமைக் குழு அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 8—4—1992 ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற ' இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா ' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.